# ராமேஸ்வரமும்
# புண்ணிய சேதுவும்



ஸ்ரீ ராமலிங்க பிரதிஸ்டை

ce Annas 5 — விலை அணா 5

# இராமேஸ்வரம்

சேது இராமேஸ்வரம் பற்றி

யாத்ரீகர்களுக்கு விபரம் தெரிய

ஓர் புஸ்தகம்

இராமேஸ்வரம் தேவஸ்தானம் கமிட்டியாரின்

அனுமதி பெற்று

இராமேஸ்வரம் தேவஸ்தானத்தாரால்

பிரசுரிக்கப்பட்டது.

1952

ஸ்ரீ கோபால் கிருஷ்ண பிரஸ்,
மதுரை.

# (அடக்கம்.)

1. முன்னுரை.

2. யாத்ரீகர்களுக்கு ஓர் அறிவிப்பு.

3. பூர்வ பீடிகை

(1) புனித சேது.

(2) சேது பந்தனம் அதன் வரலாறு.

(3) சேது யாத்திரை.

(4) இராமேஸ்வரம்.

(1) தீவு.

(2) ஊர்.

(3) கோவில்.

(4) பூஜை, கட்டணம், விபரம்.

(5) சேதுபதிகள் வரலாறு.

(6) அனுபந்தம்.

(1) உத்ஸவங்கள் விபரம்.

(2) வாகனங்கள்.

(3) திருவாபரணங்கள்.

# முன்னுரை.

"இராமேஸ்வரமும், சேதுவும்" பற்றிய இந்த வெளியீடு 1929-ம் வருஷத்தில் இராமநாதபுரம் ராஜா மகா-ள-ள-ஸ்ரீ **R. ஷண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி** அவர்கள் கட்டளைப்படி இராமேஸ்வரம் தேவஸ்தானம் மாஜி டிரஷரர் **N.** வானமாமலைப் பிள்ளை அவர்களால் இயற்றிய "இராமேஸ்வரமும், சேதுவும்" என்கிற ஆங்கில புஸ்தகத்தை தழுவியது. இதில் யாத்ரீகர்களுக்கு அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியதான சேது இராமேஸ்வர யாத்திரை செய்யவேண்டிய முறைபாடு தீர்த்தங்கள் பற்றிய விபரம், தரிசனம் செய்யவேண்டிய விபரம், க்ஷேத்திரத்தில் பார்க்கவேண்டிய அம்சங்கள் இதுபோன்ற முக்கிய தகவல்கள் அடங்கியுள்ளன. இதில்கண்ட விபரங்கள் யாத்ரீகர்கள் சிரமம் அடையாமலும், கேட்டு அறிந்து, கஷ்டமில்லாமலும், மிகவும் சுலபமாகவும் சௌகரியமாகவும் யாத்திரையை முடித்து பலன் அடைய பூரண உதவியளிக்கும், என்று எதிர்பார்த்து இதை தேவஸ்தானத்தார் வெளியிட்டுள்ளார்கள்.

# யாத்ரீகர்களுக்கு ஓர் அறிவிப்பு.

(1) இராமேஸ்வரம் சேது யாத்திரை செய்வது ஒரு ஏழை பக்தனுக்கும் இயன்ற செயலாய் இருக்க வேண்டுமென்று தேவஸ்தான அதிகாரிகள் மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருக்கின்றார்கள்.

(2) எந்த ஏழை மனிதனும், இராமேஸ்வரம் சேதுயாத்திரையை சொற்ப செலவிலும், சா்மசாலைகளில் தங்கியும் தரிசனம் செய்து எளிதில் பூர்த்திசெய்து கொள்ளமுடியும்.

(3) கோவிலுக்கு செலுத்த வேண்டிய எல்லாக் காணிக்கைகளையும், அந்தந்த சன்னதியிலிருக்கும் உண்டியல்களில் செலுத்த வேண்டும். அல்லது டிரஷரர் காரியாலயத்திலும் செலுத்தலாம்.

(4) தேவஸ்தான ஊழியர்கள் தங்கள் கடமைக் காகச் செய்யும் சேவைக்காக அவர்களுக்கு எவ்வித

மான சன்மானமும் யாத்ரீகர்கள் அளிக்கக்கூடா தென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(5) கோவில் நிர்வாகம் பூஜை விஷயங்களில் உள்ளூர் பண்டாக்களுக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது. கோவில் அர்ச்சகர்கள் தேவஸ்தானத்தில் சம்பளம் பெறும் ஊழியர்களாவார்கள். பூஜைமுத லானவை பற்றிய விவரங்கள் அறிய விரும்புவோர் டிரஷ்ரர் அல்லது கோவில் பேஷ்காரைக் கேட்டு அறியலாம்.

(6) கோவில் நிர்வாகத்தின் பலதரப்பட்ட சேவைகளின் தரங்களை உயர்த்தக்கூடிய எந்தவித மான ஆலோசனைகளையும் நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். அவைகளை இயன்ற அளவுக்கு நடை முறைக்கு கொண்டுவரப்படும்.

# பூர்வ பீடிகை.

## 1. புனிதசேது. புண்ணிய சேதுபந்தனம்.

ஹிந்து மத பக்தர்களுக்கு ஸேதுவையும் இராமேஸ்வரத்தையும் விடச்சிறந்த புண்ணியஸ்தலங்கள் வேறு இல்லை. இமயம்முதல் குமரிமுனைவரை உள்ள இந்து யாத்ரீகர்கள் சதா காலமும் இவ்விடம் திரளாக வருவதே இந்த க்ஷேத்திரத்தின் விசேஷத்தையும் இந்து மதத்தினரின் நிலையான பக்தியையும் நிரூபிக்கிறது.

வங்காள விரிகுடாவும் ஹிந்துமகா சமுத்திரமும் தனுஷ்கோடியில் புனிதசமுத்திரங்களான "மஹோததியும்" "ரத்னாகர"மும்மாக சேருமிடங்களான சேது, புண்ணிய தீர்த்த கட்டமாகும். ஸ்ரீராமர் இவ்விடத்தில்தான் இலங்கை செல்வதற்கு அணை கட்டியதாகக் கூறப்படுகின்றது. இது இரு மஹாசமுத்திரங்கள் ஒன்றுசேருமிடம் என்பதனாலும் இங்கேயே அணை ஒன்று ஸ்ரீராமபிரானால் கட்டப்பட்டது என்பதனாலும் இத்தனுஷ்கோடிக்கு வரும் யாத்ரீகர்கள் பக்தி பரவசமடைகிறார்கள்.

ஸ்கந்த புராணத்தின்படி ஸ்ரீராமர் விபீஷணரின்வேண்டுகோளுக்கிணங்கி இந்தஸேதுவில்தான் வில்லையொடித்தார் எனப்படுகிறது.

"ஸேது" என்கிறவடமொழி பதத்திற்கு"பாலம்"என்று பொருள். இப்பொழுது அப்பதம் ஸ்ரீராமர் சமுத்திரத்தின் மேல்கட்டியுள்ள அணையைக் குறிக்கும் பெயராகிவிட்டது.

இராமருடைய இலங்கை விஜயத்தினால் புகழ்பெற்ற ஸேதுவுக்கு வருவதற்கு ஒவ்வொருபிரயாணியும் மிக்க மகிழ்ச்சி

யடைகிறார்கள். உள்ளக்கிளர்ச்சியைத் தூண்டும் இரு சமுத்திரங்கள் சேரும் காட்சியும் பழங்கால தென்னிந்திய திராவிட சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மாபெரும் இராமேஸ்வரம் கோவிலையும் தெரிசிக்கவரும் யாத்ரீகர்கள் வழியில் சிதம்பரம், கும்பகோணம், தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், மதுரை முதலிய புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துத் தன்னுடைய ஸேதுயாத்திரையின் முழுப்பலனையும் அடைகிறார்கள்.

## 2. சேதுபந்தனமும் அதன் மகத்துவமும்.

மிகப்புராதன ஸேதுவின் காலமும் ஸ்ரீராமபிரானின் திரு அவதாரத்தின் தீரச்செயல்களின் காலமும் ஒன்றாகவே கருதப்படுகின்றது. யஜுர் வேதத்தில் இரண்டு பெரிய கடல்கள் கலப்பதையும் மறுகரை தெரியாத கடல் நடுவே ஸ்ரீ ராமபிரானால் போடபட்ட அணையையும்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இராமநாதபுரத்திற்குத் தெற்கே 7 மைல் தூரத்தில் "தர்ப்பசயனம்" என்கிற இடத்தில் ஆதிஸேது. அதாவது கடலில் ஸ்ரீராமபிரானால் கட்டப்பட்ட முதல் அணை ஆரம்பிக்கின்றது என்று கூறப்படுகின்றது. ஸேதுபந்தனத்தில் ஸ்ரீராமர் துஷ்டர்களை அழித்து சாதுக்களைக்காப்பாற்றி அதர்மத்தை அழித்து மனித தர்மத்தை நிலை நாட்டவும் பல மாய லீலைகள் புரிந்தார். தர்மம் தழைத்தோங்கச்செய்ய அவதரித்த ஸ்ரீராமர் பாதங்கள் பட்ட இடங்களை யெல்லாம் தரிசித்தாலே தன் ஆத்மாவும் உடலும் பரிசுத்தமடைகின்றது என்பது ஹிந்து யாத்ரீகருடைய கொள்கை. அதுவே ஸ்ரீ இராமேஸ்வரம் ஸேதுவின் மகிமைக்கு காரணமாகும்.

## 3. ஸேதுயாத்திரை.

பரந்த பாரத தேசத்தில் இந்துக்கள் மனதைக்கவரும் சில புண்ணிய ஸ்தலங்களில் ஸேதுவும் ஒன்றாகும். இராமநாதபுரம்

வந்ததுமே ஸேதுவுக்குச் செல்ல திட்டமிட்டுவிடுகின்றனர். இராமநாதபுரத்திலிருந்து 20 மைல்கள் வடகிழக்கே உள்ள "உப்பூர்" என்ற ஸ்தலத்திற்குச் சென்று அங்கு ஸ்ரீராமபிரானால் பூஜிக்கப்பட்ட "வெய்யிலுகந்த விநாயகரை" முதலாவதாக தெரிசிக்கவேண்டும். அங்கிருந்து இன்னும் சிலமைல்கள் தெற்கேயும், இராமநாதபுரத்திற்கு வடகிழக்கே 8 மைல்தூரத்திலும் உள்ளது "தேவிபட்டணம்." இதை "நவபாஷாணம்" என்றும் அழைப்பர். இது ஒருசிறிய துறைமுகப் பட்டினமாகும். அங்கே சமுத்திரத்தில் கரையை அடுத்து ஒன்பது கற்கள் செங்குத்தாக நிற்பதைக் காணலாம். அவைகள் ஸ்ரீராமரால் காரியசித்தியடைய நவக்கிரகங்களை பிதிஷ்டை செய்ததாக சொல்லப்படுகிறது.

பின்னர் ஒவ்வொரு பிரயாணியும் நேராக தனுஷ்கோடிக்குச் செல்வார்கள். இது தென்னிந்திய ரெயில்வேயில் சென்னை எழுமூரிலிருந்து தனுஷ்கோடி செல்லும் மெயின்லயனில் தெற்கேஉள்ள கடைசி ஸ்டேஷனாகும். இராமேஸ்வரத்திலிருந்து பாம்பன் ஜங்க்ஷன் மார்க்கமாக 23மைல் தூரத்தில் உள்ளது. ஒவ்வொரு பிரயாணியும் தனுஷ்கோடிக்குச் செல்லுகையில் வழியில் அநேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தல் வேண்டும். ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்திற்குப் பின் ஸேது யாத்திரை செய்தார் என்று ஆனந்தராமாயணம் (யுத்த காண்டத்தில் காண்டம் 9 ஸ்லோகம் 28) குறிப்பிடுகின்றது. ஸ்ரீராமர் உப்பூரில் விக்னேஸ்வரரை பிரதிஷ்டை செய்து வழிபட்டபின் நவபாஷாணத்தில் ஸ்நானம்செய்து தேவிபட்டினம் சென்று "வேதாள தீர்த்தத்தில்" ஸ்நானம் செய்து பின்னர் சமுத்திர சங்கமத்தைக் கடந்து பாம்பனில்உள்ள பைரவதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தங்கச்சி மடத்திற்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் ஏகாந்தமாக வீற்றிருந்தார் எனப்படும். தன்

பக்தகோடிகளுடன் புஷ்ப விமானத்திலிருந்து இறங்கி கால் நடையாகவே இராமேஸ்வரத்தில் உள்ள லக்ஷ்மண தீர்த்தம் சென்று ஸ்நானம் செய்து பின் தன் பெயரால் இருக்கும் ராம தீர்த்தத்திலும் பிறகு அக்னி தீர்த்தத்திலும் ஜடை தீர்த்தத் திலும் ஸ்நானம் செய்தார். பின்னர் அவர் கந்தமாதன பர்வ தத்தை வந்தடைந்து அனுமானுல் முன்னர் கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்த விஸ்வநாதரையும் இராமநாதரையும் வணங்கி கங்கையிலிருந்து தான் கொண்டுவந்த கங்காஜலத்தை அபிஷேகம் செய்தார். தன் வில்லினுல் கோடி தீர்த்தம் என்ற ஊற்றை சிருஷ்டித்தார். பின்பாவங்களை யெல்லாம் போக்கிட வல்ல ஸேதுமாதவரைத் தெரிசித்து பல தானதர்மங்களை வழங் கியதுடன் ஒரு மாதம் அங்கு தங்கினுர். இவற்றை யெல்லாம் வானத்திலிருந்து தேவர்கள் கண்டு மகிழ்வுற்றனர். ஸ்ரீராமர் மறுபடியும் கோடி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தார்.

சமுத்திர சங்கமமான தனுஷ்கோடியில் யாத்ரீகர்கள் முதலில் இந்துமகா சமுத்திரத்தில் ரத்னுகரத்தின் ஒருபிரிவில் முதலில் ஸ்நானம் செய்வார்கள். இந்த ஸ்நானத்திற்குத்தான் "மலவிமோசன ஸ்நானம்" என்று பெயர். இதன் பிறகு சங் கல்பம் செய்துகொண்டு கையில் மணலும் தர்ப்பையும் வைத் துக்கொண்டு யாத்ரீகர்கள் "கிரித்யா" என்ற ஒரு கடலைக் காக்கும் தேவதையைத் துதிப்பர். அத்தேவதையை வணங் கும்போதே இம்மணலை ஆகாரமாகக்கொண்டு தம்மை ஜலத் தில் ஸ்நானம் செய்ய அனுமதி தரும்படி கேட்டுக்கொள்ளு வார்கள்.

ஸேதுவில் மொத்தம் 36 ஸ்நானங்கள் செய்யவேண்டும். அங்குஇதற்கு ஒருமாதம் தங்கவேண்டும். யாத்ரீகர்கள் தங்கள் சௌகர்யத்தை உத்தேசித்து 36 ஸ்நானங்களையும் ஒரே

நாளிலோ அல்லது மூன்று நாட்களிலோ செய்வார்கள். (பிதுர்க்கள்) மூதாதையர்களின் ஆத்மா சாந்தியடைய வைதீகமாக ஜலமும் அரிசியுமாக தானம்செய்ய வேண்டுமெனக்கூறப்படுகிறது. குடும்பம் சகல சம்பத்துக்களுடன் க்ஷேமம் அடைய இவை செய்யப்படுகின்றன.

ஸேது ஸ்நானத்திற்குப் பின் இராமேஸ்வரத்தில் உள்ள ஸ்ரீ ராமநாதஸ்வாமியை தெரிசித்தல் வேண்டும். எனவே ஒவ்வொரு பிரயாணியும் தனுஷ்கோடியிலிருந்து இராமேஸ்வரம் வந்து லெக்ஷ்மண தீர்த்தம், ராமதீர்த்தம் இவைகளில் ஸ்நானம் செய்கிறார்கள். இராமேஸ்வரம் முழுமையும் பல தீர்த்தக் கட்டங்கள் இருக்கிறபடியால் யாத்ரீகர்கள் தம்இஷ்டப்படி எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம்செய்துகொள்ளலாம். ஆனால் கோவிலின் கிழக்கு வாசலுக்கு முன்னால் இருக்கும் அக்கினி தீர்த்த சமுத்திர ஸ்நானம் எல்லாவற்றிலும் முக்கியமானது. கோவிலின் உள்ளே ஏராளமான தீர்த்தங்களும், கிணறுகளும், குளங்களுமாக உள்ளன. இராமேஸ்வரத்திலும் தனுஷ்கோடியிலும் செய்த ஸ்நானங்களுக்குப் பின் இராமேஸ்வரம் கோவிலில் உள்ள கோடிதீர்த்த ஸ்நானம்தான் கடைசியாகும். பின் யாத்ரீகர்கள் புண்ணிய கோடி தீர்த்தத்தை பாத்திரங்களில் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்லுவார்கள். புண்ணிய தீர்த்த ஸ்நானங்களுக்குப்பின் கோவிலில் ஸ்ரீராமநாதஸ்வாமியைத் தரிசிக்கவேண்டும்.

## இராமேஸ்வரம்.

### தீவு

தென்னிந்திய ரயில்வேயின் சென்னை எழும்பூர் லயனில் பாம்பன் ஜங்ஷனிலிருந்து பிரியும் கிளைப்பாதையில் பாம்பன்

இராமேஸ்வரம் லயனில் இராமேஸ்வரம்தான் கடைசி ஸ்டேஷனுகும். இது சென்னையிலிருந்து தென்கிழக்கே 418 மைல்களில் இருக்கின்றது

இராமேஸ்வரத் தீவு, இராமநாதபுரம் ஜில்லாவின் தென்கிழக்குக் கோடியில் உள்ளது. அதன் வடிவம் மஹாவிஷ்ணுவின் வலம்புரிச் சங்கின் உருவத்தை ஒத்திருக்கிறது. இராமேஸ்வரம் என்றநகரமும், அதேபெயருடன் அமைந்த கோயிலும் தீவின் வடபாகத்தில் அமைந்திருக்கின்றது. தற்போதைய தீவும் நாட்டுடன் பாம்பன் முனை மூலமாக முன்பு இணைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படுகின்றது. பின்னுல் 15-ம் நூற்ருண்டில் கிருஷ்ணம நாயக்கர் என்பவரால் ஒரு கற்பாலம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனுல் காலப் போக்கில் அது புயற்காற்றினுல் சேதமடைந்து அழிந்துவிட்டது. விரிகுடாவில் பவளம் சோழி, சங்கு எடுக்கிருர்கள். இங்குள்ள சாதாரண வகை சோழிகள் சங்குகள் அழுக்கடைந்த சாம்பல் நிறத்தில் இருக்கின்றன. ஆனுல் சில சமயங்களில் 3 அங்குல நீளமுள்ள சுத்தமான வெண் பவளங்களும் அகப்படுகின்றன. கோவிலில்மேலக்கோபுரவாசலில்உள்ள கடைகளில்சோழிகள் சங்குகள் சிப்பிகள் முதலியவை குவியல் குவியலாக விற்கப்படுகின்றன.

## ஜனங்கள்.

கடற்கரை பாகங்களில் முக்கியமாக செம்படவர்கள் குடியேறியிருக்கிருர்கள். அவர்களில் ஏராளமானவர்கள் கிறிஸ்துவர்கள். பழங்கால அராபிய வர்த்தகர்களின் வம்சத்தில் வந்த சில முஸ்லீம்களும் இங்கிருக்கிருர்கள். இவர்கள் வெற்றிலை கொடிக்கால் வைத்தும் சில்லரை வியாபாரங்கள் செய்தும் ஜீவிக்கிருர்கள். பிராமணரல்லாத பல பிரிவினர்களும் ஏராளமான பிராமணர்களும் இத் தீவில் வசிக்கிருர்கள்.

யாத்ரீகர்கள் தங்குவதற்கு இடவசதிக்குப் பண்டாக்களையோ அவர்களின் ஏஜண்டுகளையோ எதிர்பார்க்காமலே சௌகரியமாக தஞ்சாவூர் ராஜா சத்திரம், வெங்கிட்டராயர் சத்திரம் இராமநாதபுரம் ராஜா சத்திரம் முதலியவைகளில் தங்கலாம். ரயில்வே ஸ்டேஷனிலும் மற்றும் நகரமுழுவதும் ஏராளமான காபி சாப்பாட்டு ஹோட்டல்களும் மிட்டாய்க் கடைகளும் இருக்கின்றன.

இராமேஸ்வரத்தைச் சுற்றிலுமுள்ள பார்க்கத் தகுந்த இடங்களாவது:

## 1 கந்தமாதனபர்வதம்.

கோவிலுக்கு வடமேற்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் ஒரு மணற் குன்றின்மேல் அழகான இரண்டடுக்கு கட்டிடம் ஒன்றுள்ளது.

அதன் அருகே இராமநாதபுரம் ஸேதுபதி மன்னர்களுள் ஒருவரால் கட்டப்பட்ட மதில்சுவருடன் கூடிய பழையஅரண்மனை ஒன்று தற்சமயம் இடிந்து ஜீரணமானதாக இருக்கின்றது.

இந்துமஹா சமுத்திரத்தின் எல்லையாய் விளங்கிய கந்தமாதனபர்வதத்தின் சிகரத்திலிருந்துதான் அனுமார் இலங்கைக்குத் தாவினார் எனப்படுகிறது. அதனால் இது இன்றும் சிறப்புற்று விளங்குகிறது.

இங்கிருந்துதான் சமுத்திரத்தைக் கடக்க அனுமார் அளவிட்டாரென்றும், ஸ்ரீராமபிரானும் இலங்கை மீது படையெடுக்க இங்குதான் ஆயத்தம் செய்தாரெனவும் கூறப்படுகின்றது.

## 2 ஏகாந்தராமர்கோவில்.

இராமேஸ்வரத்துக்கு மேற்கே 3மைலிலும் தங்கச்சிமடம் ரயில்வே ஸ்டேஷனுக்கு கிழக்கே 1மைலிலும் இந்தக்கோவில் இருக்கின்றது. அநேகமாக ஜீரணமாகிப்போன ஒருகோவிலாகும். இந்த இடம்பற்றி ஆனந்தராமாயணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

உள்ளே ஸ்ரீராமர், சீதை, லெக்ஷ்மணன் இவர்கள்நின்று காக்ஷியளிக்கும் கோலத்தை தரிசிக்கலாம்.

ஸ்ரீராமரும் சீதா பிராட்டியும் பேசிக்கொண்டிருப்பது போலும் ஸ்ரீராமர் ஒருகையை தூக்கிக்கொண்டும் இருக்கும் சிலைகளைக்காணலாம். ஸ்ரீராமர் தனது யுத்த மந்திராலோசனைக் கூட்டத்தை அலைச் சத்தம் கூட கேட்காதிருக்கும்பொருட்டு இங்குதான் நிம்மதியாக நடத்தினர் எனக் கூறப்படுகிறது.

## 3 நம்பிநாயகி அம்மன்கோவில்

இராமேஸ்வரத்திற்கு தெற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. இக்கோவிலுக்கு நம்பிநாயகி அம்மனால் அப்பெயர் வழங்கலாயிற்று. ஒரு சிறிய அழகான கோவிலில் இந்த அம்மன் வீற்றிருக்கிறாள். நம்பிக்கையுடன் ஆராதிப்போர்கள் சகல சௌகரியங்களையும் அடைந்து வருகிறார்கள். இராமேஸ்வரம் நகரத்திற்கு குழாய் மூலம் குடிக்கும் சுத்த நீர் சப்ளை செய்யும் நீர்த்தேக்கம் இதன் அருகாமையில்தான் இருக்கிறது.

## 4 சீதாகுண்டம்

இந்த இடத்தில்தான் ஸ்ரீ சீதாபிராட்டியார் தன் பூர்வ அவதாரத்தில் வேதவதியாக இருந்து தன்னை பகவானிடம்



மேலக் கோபுர வாசல்.

அர்ப்பணம் செய்ததாகக் கூறப்படுகின்றது. இது தங்கச்சி மடத்திற்கு வடமேற்கே சுமார் ஒருமைலில் உள்ள ஓர் திருக்குளமாகும்.

## 5 வில்லூரணி தீர்த்தம்

தங்கச்சிமடத்திற்குக்கிழக்கேரயில்வே ஸ்டேஷனுக்கருகில் கடல்நீரின் மத்தியில் சுத்தமானஜலம் கொண்ட ஊற்று ஒன்று இருக்கிறது. இதுதான் வில்லூரணி தீர்த்தம் எனப்படுகிறது. சீதா பிராட்டியின் தாகத்தைத் தணிக்க இராமர் தன் வில் முனையை சமுந்திரத்தில் அழுந்தியபொழுது இந்த நீரூற்று உண்டானது எனக் கூறப்படுகிறது.

## 6 பைரவ தீர்த்தம்.

இது பாம்பன் என்னுமிடத்தில் இருக்கிறது. இங்குள்ள ரயில்வே பாலம் மிக நீண்டதும் நடுவில் சப்பல் போக்குவரத்திற்கு உயர்த்தி வழி விடும் வசதிகள் பொருந்தியதாகவும், பார்க்கவேண்டிய அம்சமாக விளங்குகிறது.

## 7 ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி கோவில்.

இது இராமேஸ்வரத்திற்கு 5 மைல் தூரத்தில், இத்தீவிற்கு வடக்கரையில் ஒருமணல் திடலில் அமைந்திருக்கிறது. இராமேஸ்வரத்திலிருந்து ஜனங்கள் சமுத்திரக் கரையோரமாகவே நடந்து இங்கே செல்லலாம். இங்கு ஸ்ரீராமர், சீதை, லெக்ஷ்மணர் மூவரும் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கின்றனர். இங்கு விபீஷண சுவாமியும் இருக்கிறார். இங்கு தான் விபீஷணர் ஸ்ரீராமரிடம் சரணமடைந்ததாகவும் ஸ்ரீராமபிரானால் இங்கேதான் அவருக்கு பட்டாபிஷேகமும் நடந்ததாகத் தெரிகிறது.

## 2—நகரம் - இராமேஸ்வரம் அமைப்பு.

இராமநாதபுரத்திற்குக் கிழக்கே 33-வது மைலில் இருக்கிறது. இந்த நகரமும் கோவிலும் தீவின் வடபாகத்தில் கடற்கரையின் ஒரு உட்பிரிவில் அமைந்திருக்கிறது. அக்னி தீர்த்தம் என்பது கோவிலின் கிழக்கு வாசலுக்கு எதிரில் உள்ள கடலின் உள்பிரிவு. தென்புறக்கடல் பாய்மரக் கப்பல்கள் செல்வதற்கு தகுந்தபடி ஆழமாக இருக்கிறது. இதில்தான் தனுஷ்கோடி, தேவிபட்டணம், தொண்டி, யாழ்ப்பாணம் இடங்களுக்கு பாய்மரக் கப்பல்கள் செல்லுகின்றன. பாம்பன் பாலம் கட்டுவதற்கு முன் இவைதான் யாத்ரீகர்களுக்கு போக்கு வரவு சாதனமாக இருந்தன. இப்பொழுதும் சில யாத்ரீகர்கள தனுஷ்கோடி போக ரயிலுக்குப் பதிலாக இம்மாதிரியான படகுகளையே உபயோகப்படுத்துகிறார்கள் இப்படகுகளில் யாத்ரீகர்கள் நேராக சேதுவில் ஸ்நான கட்டத்திற்கே செல்லலாம். ரயில்மார்க்கம் போகும் பிரயாணிகள் சேதுவில் ஸ்நான கட்டத்திற்கு செல்ல மணலில் சுமார் $1\frac{1}{2}$, 2 மைல் நடக்கவேண்டி இருக்கும்.

### பெயர் விருத்தாந்தம்.

இங்கேதான் ஸ்ரீராமபிரான் ஈஸ்வரனை பூஜை செய்த இடமாதலால் இராமேஸ்வரம் என்று பெயர் பெற்றது.

இங்கு ஸ்ரீராமநாதர், விசுவநாதர் என்று இரண்டு லிங்கங்கள் இருப்பதன் காரணம் ஆனந்த இராமாயணத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. அனுமார் காசியிலிருந்து லிங்கம் கொண்டு வரத்தாமதமேற்பட்டதால் இராமர் குறித்த முகூர்த்தத்தில் சீதா பிராட்டியார் மணலினால் பிடித்து வைத்து செய்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்தார். இத

ஞல் அனுமார் கோபங்கொண்டு அந்த லிங்கத்தை தனது வாலினுல் இழுத்து எடுத்துவிட முயற்சித்தார். ஆனல் அவ ரால் முடியவில்லை. இதன் காரணத்தை அனுசரித்து, கீழ வாசல் முன்புறம் ஸ்ரீ ஹனுமார் விஸ்வரூபத்திலிருக்கிற கோவில் இருக்கிறது.

ஆனல், ஸ்ரீராமர் ஹனுமார் கொண்டு வந்த லிங்கத்தை, தான் பிரதிஷ்டை செய்த லிங்கத்தின் இடது புறத்தில் பிர திஷ்டை செய்து, அதற்குப் பூஜை வழிபாடுகளில் முதன்மை யளித்து, ஹனுமாரின் கோபத்தைத் தணித்தார். இதைத் தான் விஸ்வநாதர் என வழங்கப்படுகிறது.

இவ்விடத்தில் சிவபெருமான் இராமலிங்கர், இராமே சுவரர், இராமநாதஸ்வாமி எனப்பல திருநாமங்கள் பெற்றி ருக்கிருர். இந்த நகரத்திற்கு தேவநகரம் என்ற பெயரும் உண்டு.

இந்த நகரம் $1\frac{1}{2}$-மைல் நீளமும் $\frac{1}{2}$-மைல் அகலமும் கொண்டது. இந்நகரம் தென்னிந்திய கலாச்சாரப்படி நக ரமைப்பு போல கோவிலும் அதைச்சுற்றி நான்கு புரமும் வீதிகளும் அமைந்திருக்கின்றது.

தேவஸ்தானக் கட்டிடங்களும்; ஆபீஸ்களும் திருப்பணிக் கட்டிடங்களும் கீழரதவீதியில் இருக்கின்றன.

## இராமேஸ்வரத்திலுள்ள சர்க்கார் ஸ்தாபனங்கள்.

### விபரம்.

1. ரெயில்வே ஸ்டேஷன்.
2. சர்க்கார் ஆஸ்பத்திரி.
3. தபால் தந்தி ஆபீஸ்.

4. சப்ரிஜிஸ்திரார் ஆபீஸ்.
5. போலீஸ் ஸ்டேஷன்

கீழ்ரதவீதியிலுள்ள ராம மந்திரம் தேவஸ்தானம் கட்டிடங்களில் ஒன்று. இங்கு யாத்ரீகர்கள் தங்குவதற்கு வசதியான அறைகளும், அரசாங்க அதிகாரிகள், பிரமுகர்கள் தங்குவதற்கான காற்ரோட்டமான பங்களாவும் இருக்கின்றது இக்கட்டிடம் தண்ணீர்க் குழாய், மின்சார விளக்குடன் கூடியது.

இப் பங்களாவுக்கு தேவஸ்தானத்தில் நாள் 1-க்கு ரூ. 5. வீதம் வாடகை வசூலிக்கிறார்கள்.

இதைத் தவிற தேவஸ்தானத்தைச் சேர்ந்த இன்னும் 5 பங்களாக்கள் இருக்கின்றன.

1. ஸ்ரீனிவாஸ் பங்களா (விளாங்கொல்லை பங்களா)
2. அக்னிதீர்த்தம் பங்களா (கடற்கரை பங்களா)
3. தனுஷ் அல்லது கோகுலம் (ரெஸ்ட் ஹவுஸ் 3 பங்களாக்கள்)

இவைகள் எல்லாம் யாத்ரீகப்பிரமுகர்களுக்கு தங்குவதற்கு வசதியானவைகள். இவைகள் தவிற யாத்ரீகர்களுக்கு எந்த நேரத்திலும் தங்க இடவசதி அளிக்கும் சிலசத்திரங்கள் இருக்கின்றன.

அவைகளாவது:-

1. மஹாபீர் சத்திரம்.
2. இராமநாதபுரம் ராஜா சத்திரம்
3. வெங்கடராயர் சத்திரம்.
4. தஞ்சாவூர் ராஜா சத்திரம்.
5. மார்வாரி சத்திரம்.
6. பைராகி மடங்கள்.

## 3 a கோயில்

மகத்தான இராமேசுவரம் கோவில் தீவின் வடபாகத்தில் ஓர்உயர்ந்த மணற்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. 126-அடி உயரம் உள்ள கிழக்குக் கோபுரம் 50-ஆண்டுகளுக்கு முன்புதான் பூர்த்திசெய்யப்பட்டது. 78-அடி உயரம் உள்ள மேலக் கோபுரம் கீழக் கோபுரத்தைவிடப் புராதனமானது. இரு கோபுரங்களும் மதக் கோட்பாடுள்ள சித்திரங்களால் நிறைந்துள்ளன. இவ் வேலைப்பாடுகள் திறமையும், நேர்த்தியும் வாய்ந்த எகிப்திய பாணியைச் சேர்ந்ததும் பல சிற்பங்களைக் கொண்டவைகளுமாகும்.

தெற்கு வாசல், வடக்கு வாசல் இவற்றில் இருக்கும் இரண்டு கோபுரங்களும் பூர்த்திசெய்யப்படாமலிருக்கின்றன

### பிரகாரங்களும், சன்னதிகளும்.

இக்கோயிலில் மிகச்சிறந்ததும், யாவராலும் புகழப்படுகிற மூன்றும் பிரகாரமானது நான்கு புறங்களிலும் 17-அடி அகலத்தில் இரு புறத்தில் 5-அடி உயரமுள்ள விசாலமான குறட்டு வர்க்கங்களுடன் பார்ப்பதற்கு மனோகரமும், சிற்பக் கலையை எடுத்துக்காட்டும் வனப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

கோயிலிலுள்ள எல்லா முக்கிய சன்னதிகளும், திருக்குளங்களும் தீர்த்தங்களடங்கிய கிணறுகளும் இந்த பெரிய பிரகாரத்திற்குள் அடங்கிவிடுகிறது. இந்த முக்கியமான மூன்றும் பிரகாரம் கோயிலின் அமைப்பை, சித்ரித்து எடுத்துக் காட்டும் தன்மையதாக இருக்கிறது. இந்த பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் ஸ்ரீ ராமலிங்க பிரதிஷ்டை செய்யும்

காக்ஷியும் அனுமார் லிங்கங்கள் கொண்டு வருவதையும் ஜாதை வேலையில் பிம்பங்கள் செய்து சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

மேல வாசலில் பூஜைக்கு தேவையுள்ள தேங்காய், பழம் கற்பூரம், புஷ்பம் இது தவிற படங்கள், பொம்மைகள் முதலிய நானுவித சாமான்களை விற்பனை செய்யும் கடைகள் இருக்கின்றன. இங்கு பலவகைச் சங்குகள், சிப்பிகள் சோழிகள், பவளங்கள் முதலியவைகள் ஏராளமாக வைத்து விற்கப் படுகிறது.

இரண்டாவது பிரகாரத்தின் உட்புறம் ஸ்ரீ இராமநாதர் பர்வதவர்த்தனி தேவி இரு சன்னதிகளும், நந்தி மண்டபமும் அமைந்திருக்கின்றன.

நல்ல வெளிச்சத்துடன், காற்றோட்டமாகவும், பரிசுத்தமாகவும் அமைக்கப்பட்டிருக்கிற இக் கோயிலில் பொழுது போய்க் கொண்டிருப்பதே உணராமல் ஆனந்தமாக இருக்கலாம்.

## 3 (b) சித்திரம்--சிற்பம்.

இக்கோயில் அமைப்பு திராவிட நாகரீகத்தைத் தழுவியிருக்கிறது. உள்ளே இருக்கின்ற புராதனமான பல்வேறு சன்னதிகளும் பழைய பாண்டிய பாணியில் விளங்குகின்றன. கொழும்பில் தயாரிக்கப்பட்ட ஒரு வகை கருப்புக் கல்லில் அமைக்கப்பெற்றுள்ள கர்ப்பக்ரகம் கண்டி வரதராஜ சேகர் என்பவர் கற்கள் யாவும் கொழும்பில் செதுக்கி செருகிட்டு அனுப்பி கட்டப்பட்டது எனப்படுகிறது.

நிலைக் கதவுகளிலும், மேற் புறங்களிலும் உபயோகிக்கப் பட்டிருக்கும் 40-அடி நீளமுள்ள கல்லினுல் செய்யப்பட்ட

உத்திரங்கள் அபூர்வமான சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. உள் சன்னதியிலிருக்கும் விசாலமான தூம் பத்திகளுடனும் கூடிய மண்டபங்களும்விசேஷமிகுந்தவை

கொழும்பு அரசர் பராக்ரம பாஹு என்பவர் கி. பி. 1173-ல் இராமேஸ்வரத்தில் நிஸ்ஸங்கேஸ்வரருக்கு ஒரு கோயில் கட்டினர். அனேகமாக இப்பொழுது ஏற்பட்டு இருக்கும்கோயில் நிறுவுவதற்கு இதுதான் ஆதிகாரணமாகும் சிவலிங்க வடிவுடன் இதன்முன்னர் ஸ்ரீ இராமநாதஸ்வாமி ஒரு சிறு குடிசையில் ஒரு சந்நியாசினியால் பூஜிக்கப்பட்டதாகவும் கூறுவர்.

இராமேஸ்வரர் சன்னதியில் கோடி தீர்த்தம்தான் முதன் முதலில் இருந்ததாகத் தெரிகிறது. பின்னர் வரிசைக் கிரமமாக சர்வ தீர்த்தமும், நந்தி மண்டபமும், சிவ தீர்த்தமும் பின் அம்மன் கோயிலும், அதன் முன்னுள்ள சாத்யாமிர்த தீர்த்தம் முதலியவை நிர்மாணிக்கப்பட்டன. சேதுமாதவ சந்நதியும் மாதவ தீர்த்தமும் பிரதான சந்நதிகளிலிருந்து பெரிய கற்சுவரால் இவை பிரிக்கப்பட்டு தனியாக அமைத்திருப்பதிலிருந்து பின்னீடு ஏற்பட்டது என்பதை யூகிக்க வேண்டியிருக்கிறது.

சிவபெருமானின் திருவாலயத்தில் மஹா விஷ்ணுவின் ஆலயத்தையும் பேதமில்லாமல் இணைக்கும் உயர்ந்த எண்ணம் உடையான் சேதுபதிக்கும் நாகப்பட்டணத்திற்கு அருகில் உள்ள நாகூர் வாசியான கோமுட்டி செட்டியார் ஒருவருக்கும் ஏற்பட்டதின் விளைவாக சுமார் 1434-ம் ஆண்டில் இந்த சன்னதி ஏற்பட்டதாக அறிகிறோம்.

மேலக் கோபுரமும் வெளி மதிற்சுவரும் அவர்கள் திருப்பணியாகும். கி. பி. 1450-ல் கோயில் உட்புறத்தில் பல

திருப்பணிகளும், கட்டிடங்களும் மதுரையில் உள்ள ஹிந்து செல்வவந்தர் ஒருவரால் கட்டப்பட்டன. மேலும் 1568-ல் சின்ன உடையான் கட்டத்தேவர் என்பவரும், மதுரை விஸ்வநாத நாயக்கர் என்பவரும் பல கட்டிடங்களை கட்டியுள்ளார்கள்.

சுமார் 1710ல் அப்போதைய சேதுபதிகளில் ஒருவர் பிரகாரத்தைக் கட்ட ஆரம்பித்தார். அது ராமலிங்கசேதுபதியால் பூர்த்தி செய்யப்பட்டது (கி. பி. 1725--1770) ஆதலால் இக்கோயில் சுமார் 350 வருஷங்களில் பல தென்னிந்திய பிரமுகர்களாலும் இராமநாதபுரம் சேதுபதிகளாலும் அமைக்கப்பட்டதாகும் எனக் கூறலாம்.

கட்டிடம் பூராவும் திராவிடபாணியில் அமையப்பெற்று மகத்தானதாகவும் பலம் பெற்றதாகவும் விளங்குகின்றது. தூண்கள் மிகப்பெரிதாகவும் ஒரே மாதிரியான வளைவுகள் உயர்ந்த சிற்ப வேலைப்பாடுகளுடனும் கனமானமேலே உள்ள கற்கட்டிடத்தை தாங்கும் வலிமையுடன் அமைந்திருக்கிறது. இது மாதிரியான சிற்ப வேலைப்பாடுகளை மதுரைக் கோவிலில் பார்க்கலாம். தூண்கள் சிற்ப விசேஷம் பொருந்திய வளைவுகளைக்கொண்டுள்ளது. நிலைக்கதவு உயர்ந்த இரு பெரிய கற்களின்மேல் ஒரே பெரிய கல்லை உத்திரமாக வைத்து அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒருவிதமான கமான் வளைவுகளும் இல்லாமல் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பிரகாரத்தில் ஒரு மாதிரியாக அலங்காரமாக நிறுவப்பட்டிருக்கும் தூண்களின் அமைப்பும், நீண்ட பிரகாரத்தின் இருபுறமும் தூண் வரிசையும் அதை அடுத்து இருபுறமும் எழுப்பப்பட்டிருக்கும் ஒரு மாதிரிப்பட்ட மேடையின் வனப்பும், இக்கோவிலில் சிற்ப கலாசாரத்திற்கு ஓர் ஒப்பற்ற




அனுமார் கோபங் கொண்டு அந்த லிங்கத்தை தனது வாலினுல் இழுத்து எடுத்துவிட முயற்சித்தார் ஆனுல் அவரால் முடியவில்லை.

தன்மையாக எடுத்துக்காட்டி விளங்குகிறது. வெளிப்பிரகாரத்தின் பூரு சுற்றளவும் 400 அடி நீளம் உள்ளது. இது ஒரு அற்புதமான காக்ஷியாக விள்ங்குகிறது.

## 3 (c) நிர்வாகம்

தேவஸ்தான நிர்வாகத்தை ஐந்து மெம்பர்கள் அடங்கிய ஓர் கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட டிரஸ்டியைக் கொண்டு கவனிக்கப்பட்டு வருகிறது. ஷை தேவஸ்தானம் டிரஸ்டியும் ஷையார் ஆபீஸும் மதுரையில் இருக்கிறது. தேவஸ்தானத்தைச் சேர்ந்த கிராமங்கள் சொத்துக்களை பார்வையிடவும் கவனிக்கவும் வசதிக்காக டிரஸ்டியவர்கள் ஆபீஸ் மதுரையில் அமைந்திருக்கிறது. அவருக்கு உதவியாக கோவில் நிர்வாகத்தை கவனிக்க இராமேஸ்வரத்திலேயே டிரஷரர் என்று ஒருஅதிகாரியும் கோவிலுக்குள் நிர்வாகத்தையும் ஆராதனைகளையும் கவனிக்கும்பொருட்டு ஒருபேஷ்காரும் வேலைபார்த்து வருகிறார்கள்.

கோவிலுக்கு வருமானம் தேவஸ்தானம் கிராமகளிலிருந்தும், கட்டளை நன்கொடைகளினலும், பக்தர்கள் யாத்ரீகர்களின் காணிக்கைகளினலும், ஆராதனைகளுக்கு எற்பட்ட டிக்கட்டு ஆதாயங்களிலிருந்தும் எற்படுகிறது.

### உத்ஸவங்கள்.

(இவற்றின் விபரத்திற்கு அனுபந்தத்தைப் பார்க்கவும்.)

இக்கோயிலில் மூன்று முக்கிய உத்ஸவகள் ஆனி, ஆடி, மாசி மாதகளில் நடைபெறுகின்றன. இவைகளைப் பார்க்க எராளமான யாத்ரீகர்கள் வருகிறார்கள். வைகாசி மாதத்தில் வசந்த உற்சவம் நடைபெறுகிறது. ஒவ்வொரு

வெள்ளிக்கிழமை இரவும் நவசக்தி மண்டபத்தில் அம்மன் கொலுவிருந்து முறைப்படி பூஜை நடத்தி வேத பாராயணம், தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு முதலியவை ஓதப் பட்டு மேள வாத்திய களுடன் ஸ்ரீ அம்பாள் தங்கப்பல்லக்கில் புறப்பாடாகி மூன்றும் பிரகாரம் சுற்றிவரும்.

## பூஜை

கோவில் தினமும் காலை 6-மணியிலிருந்து இரவு10-மணி வரை ( பகலில் 12-மணிமுதல் மாலை 4-30 மணிவரை இடை நேரம் தவிற ) திறந்திருக்கிறது. பக்தர்கள் தங்கள் தங் களுக்கு மன மிசைந்தபடி சக்திக்கு தகுந்தபடி சேவைகள் நடத்தி ஆராதிக்கலாம்.

## தரிசனம்.

கோயிலின் நித்திய பூஜைகள் விசேஷ தன்மையுடைய தாக எற்படுத்தியிருக்கிறது. அவைகள் இரு வகைப்படும். ஒன்று கோயிலில் எற்படுத்தியுள்ள திட்டப்படி நடைபெறும். நித்தியப்படி ஆறுகால பூஜைகள். மற்றொன்று யாத்ரீகர்கள் செய்யப்படும் ஆராதனைகள். கோயிலில் தேவஸ்தானத்தில் நித்தியப்படி 6-காலம் பூஜை நடைபெறுகின்றன. (1) காலை 4-மணியிலிருந்து 5-மணி வரை - திருவனந்தல். (2) சூரிய உதயத்திற்குப்பின் - விளா பூஜை. ( உதயமார்த்தாண்ட பூஜை ). (3) காலை 9-மணிக்கு மேல் - காலசந்தி பூஜை (4) நடுப்பகலில் - உச்சிக்காலம். (5) அந்திப்பொழுதில் சாயரக்ஷை பூஜை. (6) இரவு 9-மணிக்கு மேல் - அர்த்த ஜாம பூஜை. என்பவைகள். பிரதி தினமும் ஷை பூஜை காலங்களில் அபிஷேகங்கள் புண்ணியாவஜனம். மஹான்

யாஸ் ஜபம், தீபாராதனை இவைகள் மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது.

## காணிக்கை விவரங்கள்.

(1) யாத்ரீகர்கள் ஸ்வாமி அம்பாளுக்கும் அர்ச்சிக்கக் கொண்டுவரும் தங்கம், வெள்ளி, வில்வ பாத்திரம், திரிசூலம், குடை மற்றும் சாமான்களை முதலில் கோயில் பேஷ்காரிடம் காட்டி அவருடைய அனுமதி பெற்று பிறகு அர்ச்சகர்களிடம் கொடுக்க வேண்டும். அர்ச்சகர் அவைகளை சுவாமிக்கோ, அம்மனுக்கோ கோருதல்படி சமர்ப்பித்து பின் கோயில் கணக்கில் தாக்கல் செய்து கொள்வார்கள்.

(2) கோவிலுக்கு நிலமோ அல்லது வேறுவிதமான மான்யமோ வழங்க விரும்புவோர்கள் கோயிலில் டிரஷ்ரரைப் பார்த்து அவரிடம் பூராவிவரமும் அறிந்துகொண்டு அதன் பிறகு டிரஸ்டியின் மூலமாக வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம்.

(3) அபிஷேகத்திற்கு கெங்கை கொண்டு வருகிறவர்கள் தீர்த்தத்தை உலோகங்களினலான பாத்திரங்களில்தான் கொண்டுவர வேண்டும். இரும்பு, தகரம், கண்ணடி முதலிய பாத்திரங்கள் உபயோகிக்கக்கூடாது. அவ்விதம் கொண்டு வந்தால் கோவிலில் வந்து பேஷ்கார் முன்னிலையில் வேறு உலோகத்திலான பாத்திரத்தில் மாற்றவேண்டும். பிரயாகை ஹரித்துவாரம் முதலிய இடங்களிலிருந்து கொண்டு வரப்படும் கெங்கை தீர்த்தம் ஏற்றுக்கொள்ளப்படும். நேரில் வந்து அபிஷேகம் செய்ய இயலாதவர்கள் கெங்கா ஜலத்தை தபால் மூலமாக அனுப்பப்படுவதை பெற்றுக்கொள்ளப்படும். அவ்விதம் தீர்த்தம் அனுப்புவோர்கள் கோத்ரம் நக்ஷத்ரம்

இவைகளைக் குறித்து அனுப்பி கட்டணம் ரூ. 2. மணியார்டர் செய்ய வேண்டும். மஹா சிவராத்திரி போன்ற தினங்களில் அபிஷேகம் பூஜை செய்யவிரும்புவோர்கள் இரண்டு வாரம் முன்னதாகவே தொகை அனுப்பவேண்டும். கங்கா ஜலம் கொண்டுவரும் யாத்ரீகர்கள் நந்தி மண்டபத்திற்கு அருகில் உள்ள பேஷ்கார் ஆபீஸில் ரூ. 2. செலுத்தி ரசீது பெற்று அந்த ரசீதை அர்ச்சகரிடம் காண்பித்து தீர்த்தத்தையும் கொடுத்தால் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்யப்படும். கெங்கை அபிஷேகம் தினமும் காலையிலிருந்து இரவு சந்தன லேபனம் செய்யப்படும் வரையிலும் நடத்தலாம். சிவராத்திரி தினம் மட்டும் இரவு முழுவதும் கெங்காபிஷேகம் நடத்தப்படும். கெங்கா ஜலம் கொண்டுவர முடியாத யாத்ரீகர்களுக்கும் கெங்காபிஷேகம் செய்து பிரார்த்தனையை நடத்த வசதிக்காக சுத்தமான கெங்கா ஜலம் பேஷ்கார் ஆபீஸில் விலைக்கு கொடுக்கப்படுகிறது.

சுமார் 1/16-படி அளவுள்ள கெங்கை விலை ரூ. 1--0--0 இது தவிற அபிஷேகம் செய்ய யாத்ரீகர்கள் ரூ. 2. டிக்கட்டு கட்டணம் செலுத்தவேண்டும். தாங்கள் அபிஷேகம் செய்ய விரும்பும் கெங்கை அளவுக்கு பாத்திரமும் விலைக்கு வாங்க வேண்டும். அபிஷேகத்திற்குப் பின் பாத்திரம் திருப்பித் தரப்பட மாட்டாது. ஷை பாத்திரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்துவிடும்.

யாத்ரீகர்கள் மேலே கண்ட விபரப்படி இராமேஸ்வரருக்குக் கங்காபிஷேகம் செய்து தங்கள் வேண்டுகோளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

சுவாமி அம்மனுக்கு காணிக்கை செலுத்தவிரும்புவோர் காணிக்கைகளை அந்தந்த சன்னதி வாசலில் உள்ள உண்டியல்

பெட்டியில் போடவேண்டும். அப் பெட்டிகள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் திறந்து கணக்கிடப்பட்டு தேவஸ்தானத்தில் ஆதாயமாக சேர்க்கப்படுகிறது.

4 சுவாமி — அம்மனுக்கு அபிஷேகம் நடத்த விரும்பும் யாத்ரீகர்கள் கீழ்க்கண்ட ரேட்டுகளில் அவர்கள் விருப்பம் போல் பணம் செலுத்தி நடத்தலாம்.

| | |
|---|---|
| உபயாபிஷேகம் பிரஸாதத்துடன் | ரூ. 5—4—0 |
| ,, ,, ,, | ரூ. 6—0—0 |
| ,, ,, ,, | ரூ. 10—8—0 |
| பஞ்சாமிர்த அபிஷேகம் ,, | ரூ. 22—8—0 |
| ருத்ராபிஷேகம் ,, | ரூ. 50—0—0 |

மேலே கண்ட அபிஷேகங்களில் பால் தேன் சந்தனம் பஞ்சாமிர்த அபிஷேகங்கள் நான்கு முக்கிய சன்னதிகளான ஸ்ரீஇராமநாதர் விஸ்வநாதர் பர்வதவர்த்தனி அம்மன் விசாலாக்ஷி அம்மன் இந்த நான்கு பிரதான சன்னதிகளிலும் விளா பூஜை கால பூஜை உச்சிக்காலம் சாயரக்ஷை அர்த்தஜாமம் இந்த காலங்களில் கோவிலில் நடத்தும் அபிஷேக சமயங்களில் நடத்தப்படுகின்றன. அபிஷேகங்கள் முடிந்தவுடன் உபயதார்கள் ஏற்பட்ட பிரசாதத்தை மடப்பள்ளியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மடப்பள்ளியிலிருந்து விலை கொடுத்தும் விற்பனைக் கேற்பட்ட பிரஸாதம் பெறலாம். மடப்பள்ளி என்பது அம்மன் சன்னதி வாசலுக்கு அருகில் இருக்கிறது. பஞ்சாமிர்த அபிஷேகத்திற்கும் ருத்ராபிஷேகத்திற்கும் முறையே ரூ. 4/. ரூ. 6/. விலையுள்ள கங்கா ஜலம் கோவிலிலிருந்து அபிகேத்திஷற்கு கொடுக்கப்படுகிறது.

## 5. டிக்கட்டு ரேட்டு விவரம்

| | |
|---|---|
| கங்காபிஷேகம் செய்ய | ரூ. 2—0—0 |
| பாலாபிஷேகம் செய்ய பால் விலை உள்பட படி 1-க்கு | ரூ. 1—8—0 |
| சஹஸ்ர நாம அர்ச்சனை 1008 நாமாவளிகள் நைவேத்யம் உள்பட அர்ச்சனை 1க்கு 1—0—0 நைவேத்யம் 2—0—0 ஆக | ரூ. 3—0—0 |
| திரிசதை அர்ச்சனை 308 நாமாவளிகள் பாயாஸத்துடன் | ரூ. 1—8—0 |
| அஷ்டோத்ர அர்ச்சனை 108 நாமாவளிகள் | ரூ. 0—5—0 |
| தேங்காய் உடைத்து நைவேத்யம் செய்ய தேங்காய் 1-க்கு | ரூ. 0—1—0 |
| உபயாபிஷேகம் | ரூ. 5—4—0 |
| ,, ,, | ரூ. 6—0—0 |
| ,, ,, | ரூ. 10—8—0 |
| பஞ்சாமிர்த அபிஷேகம் | ரூ. 22—8—0 |
| ருத்ரா பிஷேகம் | ரூ. 50—0—0 |
| பஞ்சமூர்த்தி உற்சவம் | ரூ. 160—0—0 |
| வெள்ளி ரதஉற்சவம் | ரூ. 500—0—0 |

பஞ்ச மூர்த்தி உற்சவம், வெள்ளிரத உற்சவம் இவைகள் நடத்த விரும்புவோர் பேஷ்காரீ ஆபீஸில் ஒரு தினம் முன்னதாகவே ஏற்பட்ட பணத்தை செலுத்தி தெரியப்படுத்த வேண்டும்.

பஞ்சமூர்த்தி உற்சவத்தில் சுவாமி அம்பாள் ரிஷப வாகனத்தில் பஞ்ச மூர்த்திகளுடன் நான்கு ரதவீதிகளும் எழுந்தருளி வருவார்கள். புறப்பாடு முடிந்ததும் தேவஸ்

தானத்தில் உபயதாருக்கு மாலை மரியாதைகள் நடத்தப் படும். அதேபோல் வெள்ளிரத உற்சவத்திலும் சுவாமி அம்பாள் நான்கு ரதவீதிகளிலும், எலக்டிரிக் தீபஅலங்காரங் களுடன் வெள்ளி ரதத்தில் புறப்பாடாகி வரும்.

6 சுவாமிக்கும் அம்மனுக்கும் புஷ்ப மாலைகள் சாத்துவதற்கு எவ்வித கட்டணமும் கிடையாது. பழம் வகையரு சாமான்கள் நைவேத்யம் செய்யவும், காவடி, முடி கல்யாணம் முதலியவற்றிற்கும் காணிக்கை செலுத்த வேண் டும். இதற்கு எற்பட்ட காணிக்கை கட்டண விபரங்கள் பேஷ்கார் ஆபீஸில் தெரிந்துகொள்ளலாம். அர்ச்சனை தேங் காய் உடைத்து நைவேத்யம் முதலானவை நடத்த விரும் புவோர் கடையில் சூடன் வெற்றிலை பாக்கு தேங்காய் முதலியவைகளை தாங்களே வாங்கிக்கொண்டு வந்து பேஷ் கார் ஆபீஸில் அதற்கு எற்பட்ட கட்டணம் செலுத்தி டிக்கட்டு பெற்றுத்தான் மேற்படி அர்ச்சனை முதலியவைகள் நடத்த வேண்டும்.

7 கோயிலில் ஸ்ரீ சுவாமி அம்பாள் புறப்பாட்டிற்கு செய்த எராளமான தங்க வெள்ளி வாகனங்கள் மற்றும் விலை யுயர்ந்த திருவாபரணங்கள் இருக்கின்றன. இவற்றை பார்க்க விரும்புவோர் வாகனங்கள் பார்க்க டிக்கட் ரூ 3ம் திருவாபர ணங்கள்பார்க்க டிக்கட் ரூ 15-ம் செலுத்த வேண்டும்.

வாகனங்கள் ஆபரணங்கள் பார்ப்பதற்கு விரும்புவோர் முன்னதாகவே டிரஷரரிடம் தெரிவித்து துகைசெலுத்த வேண்டும்.

யாத்ரீகர்கள் மிகமுக்கியமான ஸ்படிகலிங்க தரிசனம் அவசியம் செய்யவேண்டும். ஸ்ரீ இராமநாதர் சன்னதி காலை யில் திறக்கப்படும் பொழுதுதான் இந்த தரிசனம் செய்ய

முடியும். சாதாரண நாள்களில் இந்த பூஜை காலையில் 4-30 மணியிலிருந்து 5-30 மணிக்குள் நடைபெறும். திருநாள் காலங்களில் மாத்திரம் இந்தநேரம் மாறுதல் ஏற்படும். அர்த்த ஜாம தீபாராதனைக்குப்பின், புராதனமானதும் தங்கத்திஞல் வார்க்கப்பட்டதுமான பள்ளியறை ஸ்வாமி அம்மன் தங்க விக்ரகங்களை தரிசிக்கலாம்.

## தீர்த்தங்கள்.

8 இக்கோயிலின் பிரகாரத்தைச் சுற்றிலும் பலான இடங்களில் சுமார் 22 புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன இந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்ய விரும்புவோர் தாங்களே வாளியும் கயிறும் கொண்டு வந்து தண்ணீர் எடுத்து ஸ்நானம் செய்து கொள்ளலாம். இத் தீர்த்தங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை ரசாயன சத்துக்களை உடையதாகும்.

ஒவ்வொரு தீர்த்தமும் புராண மகத்துவம் பெற்றவை இத் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதிஞல் மனதிற்கு மகிழ்ச்சியும் உடலுக்கு நலனும் அளிப்பதுடன் பாபங்களை போக்க வல்லதாகவும் இஷ்ட சித்தி செய்யக் கூடியதாகவும் உள்ளவைகள்.

## கோவிலிலுள்ள தீர்த்தங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | மஹாலெக்ஷிமி தீர்த்தம் | கீழவாசல் முன்புரம். |
| 2. | சாவித்ரி தீர்த்தம் | ஹனுமார் கோவிலுக்கு பின்புறமுள்ள தோட்டத்தில் |
| 3. | காயத்ரி ,, | |
| 4. | சரஸ்வதி ,, | |

| | |
|---|---|
| 5. மாதவ தீர்த்தம் | 3-வது பிரகாரம் மேற்கு |
| 6. கெந்தமாதன தீர்த்தம் | ஸ்ரீ சேதுமாதவர் கோவில் சுற்றுப்புரத்தில் |
| 7. கவாக்ஷ ,, | |
| 8. கவய ,, | |
| 9. நள ,, | |
| 10. நீல ,, | |
| 11. சங்கு தீர்த்தம் | 2-வது பிரகாரம்கீழ்புரம் உள்ள கிணறுகள். |
| 12. சக்ர ,, | |
| 13. பிரம்மஹத்தி விமோசனம் தீர்த்தம் | 2-வது பிரகாரத்தில் வடக்குப் பக்கம் உள்ள கிணறுகள் |
| 14. சூரிய ,, | |
| 15. சந்திர ,, | |
| 16. கெங்கா ,, | |
| 17. யமுனா ,, | |
| 18. கயா ,, | |
| 19. சிவ தீர்த்தம் | நந்திமண்டபம் அருகே |
| 20. சாத்யாமிர்த தீர்த்தம் | அம்பாள்சன்னதி நவசக்தி மண்டபத்தில் |
| 21. சர்வதீர்த்தம் | முதற் பிரகாரத்தில் ஸ்ரீ ராமநாதர் உற்சவ மூர்த்திகள் சன்னதியின் முன்புரம் |
| 22. கோடி தீர்த்தம் | விசாலாக்ஷி சன்னதிக்கும் ஜோதிலிங்கத்திற்கும் நடுவில் |

யாத்ரீகர்கள் கோவில் அமைப்பு பூஜை பற்றி பொதுவான விவரங்கள் அறிந்து கொள்வதற்காக மேற்கண்ட விவரங்கள் தெரியப்படுத்தியிருக்கிறது. அதிகமான விபரம் அறிய விரும்புவோர்கள் டிரஷரரிடம் அல்லது கோவிலில் பேஷ்காரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

தனுஷ்கோடியிலும், இராமேஸ்வரத்திலும் ஸ்நானம் பிரார்த்தனை காரியங்களை முடித்துக்கொண்டு யாத்ரீகர்கள்

இராமநாதபுரத்திற்கு தெற்கே சுமார் 8-மைல் தூரத்தில் உள்ள ஆதிசேது அல்லது தர்ப்பசயனம் என்ற இடத்திற்கு செல்லவேண்டும். எப்படியும் யாத்ரீகர்கள் திரும்பும் பொழுது ராமநாதபுரத்தில் தங்கியும் ஆதி முதல் சேதுபதியான குஹனுக்கு இராமர் பட்டம் கட்டியதை குறிப்பிடும் கல் ஒன்று இராமநாதபுரம் அரண்மனையில் " இராமலிங்க விலாஸ் " என்ற இடத்தில் இருக்கிறதை யாத்திரையின் கடைசி அங்கமாக சென்று பார்க்கவேண்டியது அவசியம்.

சேது ஸ்நானம் செய்வதால் அடையும் நன்மை மிகவும் மகத்தானது. இராமர் பட்டாபிஷேகம் நடந்த பிறகும் ஒரு தடவை இங்கு விஜயம் செய்ததாகக் கூறப்படுகிறது. த்வாபர யுகத்தில் பாண்டவர்களும் இங்கு விஜயம் செய்ததாகத் தெரிகிறது. பாரத யுத்த சமயம் பலராமர் தீர்த்த யாத்திரையில் இவ்விடத்திற்கு வந்ததாகப் பாகவத புராணத்தில் கூறப்படுகிறது. புண்ய பூமியான இந்த சேதுகட்டத்தில் அகஸ்தியர் போன்ற மகரிஷிகளும் அவர்களது சீடர்களும் பாப விமோசனத்திற்கு பல யாகங்கள் செய்தார்கள் எனப்படுகிறது. ஒவ்வொரு புராணமும் சேது யாத்திரை மகிமையை பெரிதும் விளக்கிக் கூறுகிறது. சேது தெய்வீகத் தன்மை பெற்றிருப்பதால் அதில் ஸ்நானம் செய்வதால் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலை பெறுவதாக பல புராணங்களிலும் கூறப்படுகிறது.

## சேதுபதிகள்.

புண்ணிய சேதுவை நினைக்கும்போது அதன் காவலர்களான சேதுபதிகளும் நம் நினைவிற்கு வருகிறார்கள். அவர்கள் குஹனுடைய பரம்பரையைச் சார்ந்தவர்களாகும்.

இராமநாதபுர ராஜ்ய பிரதிநிதியாகிய சேதுபதிகள் குடும்பம் தென் இந்தியாவில் பிரசித்தி பெற்ற, ஆற்றல்மிகுந்த மறவர்களின் வகுப்புக்குத் தலைவர்களாகும்.

அவர்கள் இராமேஸ்வர அணைக்கட்டின் காவலர்களாக வம்ச பரம்பரையாக இருந்துவந்தார்கள். அவர்களை இராமநாத ஸ்வாமியை தெரிசிக்க வரும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களும் நன்கறிவார்கள். முதல் சேதுபதிக்கு ஸ்ரீ ராமராலேயே முடி சூட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

## பூர்வ சரித்திரம்.

ஸ்ரீ இராமபிரான் முதல் சேதுபதியை நியமித்ததாகவும் பாண்டியன முதல் சேதுபதிக்குக் கடற்கரையோரத்திலிருக்கும் எல்லாக் காடுகளையும் மான்யமாக அளித்ததாகவும் கூறப்படுகிறது. பழங்கால செப்புப் பட்டயங்களின் மூலம் சேதுபதிகள்தான் பாண்டிய மண்டலத்திற்கும், சோழ மண்டலத்திற்கும் எல்லைக் காப்பாளர்களாக இருந்தார்கள் என்றும் தொண்டையன் கரைக்கு அவர்கள்தான் காவலர் என்றும் அறிகிறோம். அவருடைய கொடிகளில் கருடனும், அனுமானும் பொறிக்கப் பட்டிருந்ததாகவும் தெரிகிறது. நெடுநாட்களாக கோவிலில் வாசிக்கப்படும் பட்டயங்களில் கூறப்படும் சேதுபதிகளின் பட்டயங்களினாலும் அவர்கள் உயர்ந்த நிலைமையும் பெருமையும் தெரிய வருகிறது.

## கி. பி. 1600-க்கு பிந்திய சேதுபதிகளின் வம்சாவளி ஜாபிதா.

1. கி. பி. 1605 — 21 சடைக்கதேவர் உடையான் சேதுபதி இவர் ராமேஸ்வரம் கோவிலுக்கு சில கிராமங்களை நன்கொடையளித்திருக்கிறார்

2. கி. பி. 1622 — 35 குட்டன் சேதுபதி. இவர் இராமேஸ்வரம் கோவிலில் சில கட்டிடங்கள் கட்டி திருப்பணி இயற்றியிருக்கிருர்.

3. கி. பி· 1635—46. இரண்டாம் சடைக்க தேவர் என்ற தளவாய் சேதுபதி.

4. கி. பி. 1647 — 72 ரெகுநாத திருமலே சேதுபதி. இராமேஸ்வரம் கிராமத்தைச் சீர்படுத்தி அமைத்து அங்கு வசித்து வந்ததுடன் கோயில்கள் கட்டிஞர். அநேக தர்மங்களுக்கு நன்கொடையளித்திருக்கிருர்.

5. கி. பி. 1672 — ராஜா சூரிய சேதுபதி.

6. கி. பி. 1673 . அதான ரகுநாத சேதுபதி.

7. கி. பி. 1674 —1710. கிழவன் (ரகுராதி) சேதுபதி. 1702-ல் இவர் மதுரை தஞ்சாவூர் இரு ராஜ்யத்தின் ஒன்றுபட்ட சேனையை தோற்கடித்தார். பின்னல் தஞ்சாவூர் சேனையின் படையெடுப்பை முறியடித்தார். 1694-ல் மன்னர் விரிகுடா கடலில் முத்து எடுப்பதுபற்றி டச்சுக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். 1709-ல் புதுக்கோட்டை ராஜ்யத்தை ஏற்படுத்தி தான் மணந்து கொண்ட பெண்ணின் சகோதரனுக்குக் கொடுத்தார். தனது தலைநகரை போகலூரிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றினர். பிரசித்திபெற்ற "இராமலிங்க விலாஸ்" என்ற கட்டிடத்தைக் கட்டிஞர்.

8. கி. பி. 1711 — 1725 விஜய ரெகுநாத சேதுபதி. (திருவண்டய தேவர்) இவர் இராமேஸ்வரம் கோயிலில் மிகுந்த பக்தி கொண்டவர். ஏராளமான மான்யங்கள்

அளித்தார். இராமநாதபுரத்திலிருந்து கொண்டு 33-மைல் களில் உள்ள ராமேஸ்வரத்திற்கு இவர் குதிரை சவாரியில் தினசரி விஜயம் செய்தாராம்.

9. 1726. சுந்தரேஸ்வர ரெகுநாத சேதுபதி.

10. 1727 — 1729 பாணி சங்கர் சேதுபதி.

11. 1730 — 1735 கட்டயத் தேவர் என்ற முத்து விஜய ரெகுநாத தேவர் இவரோடு மறவர் ஆட்சி முடிவடைந்தது. தஞ்சாவூர் ராஜாங்கம் ஒரு பகுதியும் சிவகங்கை எஸ்டேட்டையும் தங்கள் தங்கள் பாகத்துக்கு எடுத்துக் கொண்டு மீதமுள்ள 3/5 பாகம்தான் சேதுபதிக்கு எஞ்சி நின்றது. இவர் சத்திரங்கள் கட்டினர். கோவில் களுக்கு தர்மசாசனங்களும் மான்யங்களும் அளித்தார்.

12. 1736 — 1748 சிவகுமார முத்துவிஜய ரெகுநாத சேதுபதி. இராமேஸ்வரம் கோயிலின் 3-வது பிரகாரம் இவரால் ஆரம்பிக்கப்பட்டது.

13. 1748 — 1749 சேதுபதி ராஜ தேவர்.

14. 1749 — 1762 M. செல்ல தேவர்.

15. 1763 — 1772 முத்துராமலிங்க சேதுபதி.

16. 1803 — 1807 ராணி மங்களேஸ்வரி நாச்சியார் சேதுபதி. மேற்சொன்னவரின் சகோதரி. தன் நன்னடத்தையால் ஜமீனை பிரிட்டிஷாரிடமிருந்து பெற்ருர். தர்ம மான்யங்களுக்கும் 96 தர்ம சாசனங்கள் அளித்த வகையிலும் இந்த ராணியின் ஆட்சி குறிப்பிடத்தக்கது.

17. 1807 — 1820 அய்யாஸ்வாமி சேதுபதி.

18. 1820 — 1830 விஜயரகுநாத ராமஸ்வாமி சேதுபதி. இராமேஸ்வரம் கோவிலுக்கு ஏராளமான மான்யங்களை அளித்தார்.

1830 — 1840 முத்துச்செல்லத்தேவர் சமஸ்தானத்தை நிர்வகித்தார். 1840 — 1846 கோர்ட் ஆப் வார்ட்ஸ் நிர்வகித்தது.

19. 1846 — 1862 ராணி பர்வதவர்த்தனி நாச்சியார் சேதுபதி.

20. 1862 — 1873 முத்துராமலிங்க சேதுபதி.

21. 1873 — 1903 பாஸ்கரசாமி சேதுபதி.

22. 1910 — 1928 ராஜ ராஜேஸ்வர சேதுபதி. என்ற முத்துராமலிங்க சேதுபதி.

23. 1928 — ராஜா ஷண்முக ராஜேஸ்வர நாகநாத் சேதுபதி. தற்போதைய இராமநாதபுரம் ராஜா.

## அனுபந்தம்.

### வருஷாந்திர உத்சவங்கள்.

### இராமேஸ்வரம் கோவிலில் நடத்தப்படுகிற உத்சவங்கள்.

| நிர் | விசேஷம் | ஆரம்பம் | முடிவு | நாட்கள் |
|---|---|---|---|---|
| 1. | மஹா சிவராத்திரி | மாசி மீ கிருஷ்ணபக்ஷம் ஆரம்பம். (February - -March ) | மாசி மீ அமாவாசை | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | வசந்தோத்ஸவம் | வைசாகம் ஷஷ்டி (May-June) | வைசாகம் பௌர்ணமி | 10 |
| 3. | ராமலிங்க பிரதிஷ்டை உற்சவம். | ஜேஷ்ட சுக்ல சுத்த ஷஷ்டி. (June-July) | ஜேஷ்ட பௌர்ணமி | 10 |
| 4. | திருக்கல்யாண உற்சவம். முக்கிய தினங்கள் 1. ரிஷப வாகன ஸேவை 2. ரத உற்சவம். 3. அம்பாள் தபசு 4. தங்கப் பல்லக்கில் புஷ்பாலங்காரத்துடன் அம்பாள் சயன ஸேவை. 5. திருக்கல்யாணம் | ஆஷாட பகுள கிருஷ்ண அஷ்டமி (July-Aug) | சிராவண சுத்தம் | 17 |
| 5. | நவராத்திரிஉற்சவம் தசரா முடிவில் விஜயதசமிபுறப்பாடு | பத்ரபாத சுத்த சுக்ல பிரதமை | தசமி | 10 |
| 6. | ஸ்கந்த ஷஷ்டி உற்சவம். ஷஷ்டி தினம் சூர சம்ஹாரம் | ஆஸ்வயாகசுத்த சுக்ல பிரதமை | ஆஸ்வயாக சுத்தஷஷ்டி | 6 |
| 7. | ஆருத்ரா தரிசன உற்சவம். உற்சவ முடிவில் ஆருத்ரா தெரிசனம் | மார்க்கசீர்ஷ சுத்தஷஷ்டி சதைய நக்ஷத்திரம் மார்கழி | மார்க்க சீர்ஷசுத்த பௌர்ணமி | 10 |

மேலேகண்ட விசேஷ உற்சவங்கள் நீங்கலாக மாதாந்தாத்திலும், வாராவாரமும் உத்ஸவங்கள் நடத்தப்படுவதற்கு விபரம்.

1. மாதாந்திர விசேஷம் கார்த்திகையன்று (இரவு 8 — 10-மணி) ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வெள்ளி மயில் வாகனத்தில் நான்கு ரதவீதிகளிலும் புறப்பாடாகி வரும்.

2. ஒவ்வொரு பக்ஷங்களில் பிரதோஷ தினங்தோறும் (மாலை 5 — 6-மணி) ஸ்ரீராமநாதர் தங்க ரிஷப வாகனத்தில் மூன்றும் பிரகாரத்தில் புறப்பாடாகி வரும்.

3. வாராந்திரம் சுக்கிரவாரம் ( வெள்ளிக் கிழமை ) ( இரவு 8 — 9 மணி ) ஸ்ரீ அம்பாள் தங்கப்பல்லக்கில் மூன்றும் பிரகாரத்தில் புறப்பாடாகி வரும்.

4. இதர விசேஷங்கள்.

1. மகா சங்கராந்தி தினம். புஷ்ய மாதம் முதல் தேதியிலும்.

2. தமிழ் வருஷப்பிறப்பு சித்திரை மீ முதல் தேதியிலும்.

3. திருக்கார்த்திகை. கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்திலும்.

4. தெப்ப உத்ஸவம். புஷ்ய மாதம் பௌர்ணமியிலும்.

மேலேகண்ட தினங்களில் ஸ்ரீ சுவாமி அம்பாள் ரிஷப வாகனரூடராய் பஞ்சமூர்த்திகள் சமேதராக புறப்படாகி காக்ஷி கொடுப்பார்கள்.

வைகுண்ட ஏகாதேசியன்றும் ஸ்ரீ ராமநவமியன்றும் ஸ்ரீ ராமர் புறப்பாடாகி காக்ஷியளிப்பார்.

## உத்ஸவங்களின் விபரம்.

## மாசி மஹாசிவராத்திரி உத்ஸவம்.

(பிப்ரவரி மாதத்தில்)

### வாகனங்கள் கேடகங்கள் விபரம்.

| திருநாள் | பகல் | | இரவு | |
|---|---|---|---|---|
| | சுவாமி | அம்பாள் | சுவாமி | அம்பாள் |
| 1 | | | நந்திகேஸ்வரர்வாகனம் | ஹம்ச வாகனம் |
| 2 | தங்க கேடகம் | தங்க கேடகம் | கற்பக விருக்ஷம் | காமதேனு |
| 3 | ஷை | ,, | பூத வாகனம் | கிளி வாகனம் |
| 4 | ஷை | ,, | கைலாச வாகனம் | சிம்ஹ வாசனம் |
| 5 | ஷை | ,, | யானை வாகனம் | யானை வாகனம் |
| 6 | ஷை | ,, | ரிஷப வாகனம் | ரிஷப வாகனம் |
| 7 | ஷை | ,, | இந்திர விமானம் | இந்திர விமானம் |
| 8 | இந்திர விமானம் | இந்திர விமானம் | குதிரை வாகனம் | குதிரை வாகனம் |
| 9 | ரதம் | | வெள்ளி ரதம் | |
| 10 | ஏகசிம்ஹாசனம் | | ரிஷப வாகனம் | ரிஷப வாகனம் |
| 11 | பிக்ஷாடனர் | | தங்க கேடகம் | |
| 12 | சண்டிகேஸ்வரர் | | தங்க கேடகம் | |

## ஆடி திருக்கல்யாண உத்ஸவம்.

( ஜூலை—ஆகஸ்டு )

### வாகனங்கள் கேடகங்கள் விபரம்.

| திருநாள் | பகல் | | இரவு | |
|---|---|---|---|---|
| | சுவாமி | அம்பாள் | சுவாமி | அம்பாள் |
| 1 | ,, | ,, | ,, | தங்க கேடகம் |
| 2 | ,, | தங்கப் பல்லக்கு | ,, | காமதேனு வாகனம் |
| 3 | ,, | ,, | ,, | ஹம்ஸ வாகனம் |
| 4 | ,, | ,, | ,, | சிம்ஹ வாகனம் |
| 5 | ,, | ,, | ,, | யானை வாகனம் |
| 6 | ,, | ,, | ,, | ரிஷப வாகனம் |
| 7 | ,, | ,, | ,, | வெள்ளி ரதம் |
| 8 | ,, | ,, | ,, | குதிரை வாகனம் |
| 9 | ,, | ரத உத்ஸவம் | ,, | கிளி வாகனம் |
| 10 | ,, | தங்கப் பல்லக்கு | ,, | ,, |
| 11 | ரிஷப வாகனம் | வெள்ளி கமல வாகனம் | ,, | தங்கப் பல்லக்கு புஷ்பாலங்காரத்துடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | | ,, | ,, | திருக்கல்யாண<br>உத்ஸவம் |
| 13 | ,, | ,, | திருஊஞ்சல் | |
| 14 | ,, | ,, | திருஊஞ்சல் | |
| 15 | ,, | ,, | ஏக சிம்மாசனம் | |
| 16 | ,, | ,, | நந்திகேஸ்வரர்வாகனம் | யானை வாகனம் |
| | | | பட்டணப்பிரவேசம். | |
| 17 | தங்க கேடகம் | தங்ககேடகம் | கெந்தமாதன பர்வதம்.<br>மண்டகப்படி.<br>வதூ கிரஹப்பிரவேசம். | |



# ஆனி ராமலிங்க பிரதிஷ்டை உத்ஸவம்

(ஆனிமீ ஜூலைமீ)

## வாகனங்கள் கேடகங்கள் விபரம்

| திருநாள் | பகல் | | இரவு | |
|---|---|---|---|---|
| | சுவாமி | அம்பாள் | சுவாமி | அம்பாள் |
| 1 | ஸ்ரீராமலிங்க பிரதிஷ்டை<br>ஷை வரலாறு அடங்கிய<br>உத்ஸவம். | | வெள்ளி ரதம்<br>விநாயகர்<br>சுப்ரமண்யர்<br>நந்திகேஸ்வரர்<br>சண்டிகேஸ்வரர் | சிம்ம வாகனம்<br>குதிரைவாகனம்<br>தங்க கேடகம்<br>பிரதோஷ<br>ரிஷபவாகனம் |
| 2 | தங்க கேடகம் | | கலபக விருக்ஷம் | காமதேனு<br>வாகனம் |
| 3 | ,, | ,, | பூத வாகனம் | கிளி வாகனம் |
| 4 | ,, | ,, | கைலாச<br>வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 5 | ,, | ,, | யானை வாகனம் | யானை வாகனம் |
| 6 | ,, | ,, | ரிஷப வாகனம் | ரிஷப வாகனம் |
| 7 | ,, | ,, | ஏக சிம்மாஸனம் | ஏகசிம்மாஸனம் |
| 8 | ,, | ,, | குதிரை<br>வாகன | குதிரை<br>வாகனம் |
| 9 | தேர் | தேர் | நந்திகேஸ்வரர்<br>வாகனம் | சிம்ம வாகனம் |
| 10 | ஏக சிம்மாசனம் | | ரிஷப வாகனம் | ரிஷப வாகனம் |

## இராமேஸ்வரம் கோவில் உத்ஸவ காலங்களில் புறப்பாடு செய்யப்படும் வாகனங்களின்

## விபரம்

தங்கவாகனங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தங்கப் பல்லக்கு | | |
| 2. | ,, | கேடகம் | சுவாமிக்கு. |
| 3. | ,, | ,, | அம்பாளுக்கு |
| 4. | ,, | ,, | சுப்ரமண்யருக்கு. |
| 5. | ,, | ,, | விநாயகருக்கு. |
| 6. | ,, | குதிரை | சுவாமிக்கு. |
| 7. | ,, | ,, | அம்பாளுக்கு. |
| 8. | ,, | சிம்மம் | ,, |
| 9. | ,, | காமதேனு | ,, |
| 10. | ,, | நந்திகேஸ்வரர் | சுவாமிக்கு. |
| 11. | தங்க. | ரிஷப வாகனம் | பிரதோஷ ரிஷபம். |
| 12. | ,, | ,, | சுவாமிக்கு. |
| 13. | ,, | ,, | அம்பாளுக்கு. |
| 14. | ,, | கருடன் | ஸ்ரீ ராமருக்கு. |
| 15. | ,, | பள்ளியறை | மஞ்சம் |
| 16. | வெள்ளி ரதம் | (எலக்டிரிக் தீப அலங்காரத்துடன்) | |
| 17. | ,, | கைலாச வாகனம் | (தங்கத்தில் ராவணனுடன் கூடியது) |
| 18. | ,, | யானை | சுவாமிக்கு. |
| 19. | ,, | ,, | அம்பாளுக்கு. |

| | | | |
|---|---|---|---|
| 20. | ,, | அன்னம் | ,, |
| 21. | ,, | கமல வாகனம் | ,, |
| 22. | ,, | மூஷிக வாகனம் | கணேசர் |
| 23. | ,, | மயில் வாகனம் | சுப்ரமண்யர். |
| 24. | ,, | கிளி வாகனம் | அம்பாளுக்கு. |
| 25. | ,, | கற்பக விருக்ஷம் | சுவாமிக்கு. |
| 26. | ,, | பூதவாகனம் | ,, |
| 27. | ,, | பல்லக்கு | அம்பாளுக்கு. |

ITEM No 1. நீங்கலாக பாக்கி அயிட்டங்கள் பார்ப்பதற்கு டிக்கட்டு ரூ. 3-0-0.



# இராமேஸ்வரமும் புண்ணிய சேதுவும்

## பிழை திருத்தல் குறிப்பு

| பக்கம் நம்பர் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 1 | பக்கர்களுக்கு | பக்தர்களுக்கு |
| 8 | 6 | ஸ்தலகங்ளை | ஸ்தலங்களை |
| | 6 | தன்னுடைய | தங்களுடைய |
| | 13 | போடபட்ட | போடப்பட்ட |
| 9 | 11 | பிதிஷ்டை | பிரதிஷ்டை |
| | 15 | எழுபூரிவிருந்து | எழும்பூரிவிருந்து |
| 12 | 8 | அமைந்திருக் | அமைந்திருக்கின் |
| | | கின்றது | றன |
| 13 | 9 | இடங்களாவது | இடங்களாவன |
| 14 | 3 | கோவி | கோவி |
| 15 | 18 | வடகரையில் | தென்கரையில் |
| 18 | 20 | அவைகளாவது | அவைகளாவன |
| 23 | 16 | கிராமகளி | கிராமங்களி |
| | | விருந்தும் | விருந்தும் |
| 23 | 22 | உத்ஸவகள் | உத்ஸவங்கள் |
| | 23 | மாதகளில் | மாதங்களில் |
| 27 | 25 | அபிகேத் | அபிஷேகத்திற்கு |
| | | திஷற்கு | |
| 29 | 18 | ங்க | தங்க |
| 31 | 22 | ஜோதி லிஙகத் | ஜோதி லிங்கத் |
| | | திற்கு | திற்கு |
| 38 | 22 | ஏகா தேசியன | ஏகாதசியன்றும் |
| | | றும் | |
| 42 | 11 | கல்பக | கற்பக |
| | 15 | யாணே | யானை |